APPOLLO STUDY CENTRE

# TNPSC GROUP II TEST BATCH 2024
# TEST VII nghJj;jkpo; gFjp m

1. “சுந்தரி அல்லது அந்தரப் பிழைப்பு” என்ற நாவலின் ஆசிரியர் யார்?
   a. சா.வி  b. கு.ப.ரா  c. வ.ரா
   d. மு.வ  e. விடை தெரியவில்லை

2. பிம்பங்களற்ற தனிமையில்
   ஒன்றிலொன்று முகம் பார்த்தன
   சலூன் கண்ணாடிகள் - என்ற ஹைக்கு யாருடையது?
   a. ஜெயகாந்தன்  b. ஈரோடு தமிழன்பன்  c. நா. முத்துக்குமார்
   d. அப்துல் ரகுமான்  e. விடை தெரியவில்லை

3. “கரிப்பு மணிகள்” எனும் உப்பளத் தொழிலாளர்களின் உவர்ப்பு வாழ்க்கையை புதினமாக படைத்த படைப்பாளர் யார்?
   a. கி. ராஜநாராயணன்  b. ராஜம் கிருஷ்ணன்  c. தி. ஜானகி ராமன்
   d. புதுமைபித்தன்  e. விடை தெரியவில்லை

4. “தொல்காப்பியத்தைப் படித்து படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன்” இன்னிலையைக் கற்று என் இன்னல்களையெல்லாம் வென்றேன், என்று கூறியவர் யார்?
   a. ரா.பி  b. வ.உ.சி  c. கி.வ.ஜ
   d. திரு.வி.க  e. விடை தெரியவில்லை

5. தமிழ் நாடக உலகின் “நாடகக் காவலர்” என்று போற்றப்பட்டவர்
   a. ஆர்.எஸ். மனோகர்  b. பம்மல் சம்பந்தனார்
   c. காசி விஸ்வநாதர்  d. பெ. கிருஷ்ணசாமி பாவலர்
   e. விடை தெரியவில்லை

6. பொருந்தாததை தேர்வு செய்க
   a. நனிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி – புறநானூறு
   b. வண்டொடு புக்க மணவாய்த் தென்றல் - சிலப்பதிகாரம்
   c. வளி மகின் வலி இல்லை – புறநானூறு
   d. பொருந்தாதது எதுவுமில்லை
   e. விடை தெரியவில்லை

7. கீழ்க்கண்டவற்றில் சரியானவற்றை தேர்வு செய்க
   i. தமிழில் தோன்றிய குளத்தங்கரை அரசமரம் (1915) என்ற முதல் சிறுகதை எழுதியவர் வா.வே.சு. ஐயர்
   ii. தம் கிராமிய பின்புலத்தை களமாக்கி கொண்டு வட்டார மொழியில் கதை சொல்லியவர் கி. ராஜநாராயணன்
   iii. மனித உறவுகளையும், மனச்சலனங்களையும் சித்தரித்தவர் தி. ஜானகிராமன்

iv. நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்வை மையமாக கொண்டு எழுதியவர் அசோகமித்ரன்
a. i, ii சரி iii, iv தவறு b. i, ii, iii, iv சரி c. i தவறு ii, iii, iv சரி
d. i, ii தவறு iii, iv சரி e. விடை தெரியவில்லை

8. திரைப்படமான தமிழ் இலக்கியங்களில் பொருந்தாதது எது?

| | ஆசிரியர் | நூல் | திரைப்படம் |
|---|---|---|---|
| a. | அண்ணா | பார்வதி பி.ஏ | ரங்கோன் ராதா |
| b. | லஷ்மி | பெண் மனம் | இருவர் உள்ளம் |
| c. | கோமல் சுவாமிநாதன் | தண்ணீர் தண்ணீர் | தண்ணீர் தண்ணீர் |
| d. | சு. வெங்கடேசன் | காவல் கோட்டம் | அரவான் |

e. விடை தெரியவில்லை

9. ஈரோடு தமிழன்பன் கவிதை நூல்களில் தவறானதை தேர்வு செய்க
a. வணக்கம் வள்ளுவம் b. மலையருவி
c. தீவுகள் கரையேறுகின்றன d. ஊமை வெயில்
e. விடை தெரியவில்லை

10. பொருத்துக
A. அம்பை 1. ரப்பர் பந்து
B. எஸ். இராமகிருஷ்ணன் 2. வீட்டின் மூலையில் ஒரு சமையல் அறை
C. ஜெயகாந்தன் 3. பூ உதிரும்
D. சுஜாதா 4. ஜன்னல்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| c. | 4 | 3 | 1 | 2 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

11. கீழ்க்கண்ட இலக்கண நூல்களுள் தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க

| | இலக்கண நூல் | ஆசிரியர் |
|---|---|---|
| a. | நன்னூல் | பவணந்தி முனிவர் |
| b. | இலக்கண விளக்கம் | வைத்தியநாத தேசிகர் |
| c. | தமிழ்நெறி விளக்கம் | நாற்கவிராச நம்பி |
| d. | தொன்னூல் விளக்கம் | வீரமாமுனிவர் |

e. விடை தெரியவில்லை

12. கீழ்க்கண்டவற்றில் சரியானதை தேர்வு செய்க
i. 'நிகண்டு' என்பது வடமொழி பெயர்
ii. சங்க காலத்தில் வரிச்சொல், உரிச்சொல், பனுவல் என்றும் அழைப்பர்
iii. தமிழில் தோன்றி முதல் நிகண்டு "சேந்தன் திவாகர நிகண்டு"
iv. தற்போது வரை தமிழில் 24 நிகண்டுகள் உள்ளன
a. i, ii சரி iii, iv தவறு b. i, iii சரி, ii, iv தவறு
c. ii சரி, i, iii, iv தவறு d. i, ii, iii, iv சரி
e. விடை தெரியவில்லை

13. வாய்மையை சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் பேசுகின்றன, வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்பதனை

I. பொய்யா செந்நா - புறநானூறு

II. பொய்படுபு அறியா வயங்குசெந் நாவின் - பதிற்றுப்பத்து

சரியாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க

a. I சரி II தவறு    b. I, II சரி    c. I தவறு II சரி

d. I, II தவறு    d. விடை தெரியவில்லை

14. ‘‘தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்’’ எனும் பாடல் வரியினை பன்னிரு திருமுறையில் பாடியவர் யார்?

a. சுந்தரர்    b. மாணிக்கவாசகர்    c. ஆண்டாள்

d. திருநாவுக்கரசர்    e. விடை தெரியவில்லை

15. ‘‘உண்பது நாழி உடுப்பவை இரண்டே’’ என்ற புறநானூறு பாடல் வரி பாடிய புலவர்

a. மதுரை இளநாகனார்    b. பொன்முடியார்    c. நக்கீரனார்

d. குடபுலவியனார்    e. விடை தெரியவில்லை

16. ‘‘நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர் அளவின்றே... நாடனொடு நட்பே’’
என்ற பாடல் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்

a. குறுந்தொகை    b. பரிபாடல்    c. நற்றிணை

d. அகநானூறு    e. விடை தெரியவில்லை

17. செங்கோல், தமிழ்முரசு இதழ்களை வெளியிட்ட தமிழறிஞர் யார்?

a. வ.வே.சு. ஐயர்    b. கலைஞர்    c. மா.பொ.சி

d. மு.சி.பூர்ணலிங்கம்    e. விடை தெரியவில்லை

18. ‘‘அந்தாதி’’ நூல்களை பொருத்துக

| ஆசிரியர் | நூல் |
|---|---|
| A. காரைக்கால் அம்மையார் | 1. அற்புதத் திருவந்தாதி |
| B. திருமழிசை ஆழ்வார் | 2. நான்முகன் திருவந்தாதி |
| C. சேரமான் பெருமாள் நாயனார் | 3. பொன் வண்ணத்தந்தாதி |
| D. நம்பியாண்டார் நம்பி | 4. திருத்தொண்டர் திருவந்தாதி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 2 | 4 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 1 | 4 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

19. சாகித்ய அகாடமி விருது (2019)இல் பெற்ற சோ. தர்மன் அவர்களின் கீழ்க்கண்ட நாவல்களில் தவறானதை தேர்வு செய்க

a. தூர்வை (1996)    b. சூல் (2016)

c. வௌவால் தேசம் (2022)    d. கோவேறு கழுதைகள் (1994)

e. விடை தெரியவில்லை

20. சரியானதை தேர்வு செய்க

i. 1894இல் உ.வே.சா புறனாநூற்றை பதிப்பித்தார்

APOLLO STUDY CENTRE

ii. 1915இல் சவுரி பெருமாள் அரங்கனார் குறுந்தொகையை பதிப்பித்தார்
a. i, ii ம் சரி b. i சரி ii தவறு c. i, ii ம் தவறு
d. i தவறு ii சரி e. விடை தெரியவில்லை

21. “நிருமித்த” என்பதன் பொருள் யாது?
a. தவறிய b. கலைத்த c. உருவாக்கிய
d. தொடங்கிய e. விடை தெரியவில்லை

22. “யாக்கை” என்பதன் பொருள் யாது?
a. நலம் b. உடம்பு c. எலும்பு
d. வானம் e. விடை தெரியவில்லை

23. தவறாக பொருந்தியுள்ள சிறப்பு பெயரை தேர்வு செய்க
ய. நறுந்தொகை - வெற்றிவேக்கை
டி. கூத்தராற்று படை - மலைபடுகடாம்
உ. தமிழரின் கருவூலம் - புறநானூறு
ன. நெடுந்தொகை - நன்னூல்
ந. விடை தெரியவில்லை

24. இளமை பெயர்களில் பொருந்தாதது எது?
a. வாழைக்கச்சல் b. முருங்கை சரடு c. பலாப்பிஞ்சு
d. மாவடு e. விடை தெரியவில்லை

25. பொருந்தாத மரபு இணை எது?
a. மான் - கன்று b. சிங்கம் - பறழ் c. பூனை - குட்டி
d. பசு – கன்று e. விடை தெரியவில்லை

26. தொகுப்பு பெயர்களில் தவறானது எது?
a. திராட்சைகுலை b. யானை மந்தை c. ஆநிரை
d. ஆட்டு மந்தை e. விடை தெரியவில்லை

27. தொழிற்பெயர் அல்லாதது எது?
a. தொல்லை b. கோறல் c. காட்சி
d. பார்வை e. விடை தெரியவில்லை

28. தவறானதை தேர்க (பொருட்பெயர்)
a. ஒரு முழு பெயரை குறிக்கும் பெயர்
b. அப்பொருள் உயர்திணை, அஃறிணை பொருளாக இருக்கலாம்
c. உயிருள்ள உயிரற்ற பொருளாக இருக்கலாம்
d. ஒரு காலத்தையும் குறிக்கும் பெயர் பொருட்பெயர்
e. விடை தெரியவில்லை

29. “ஏற்பாடு” சரியான பிரிதலை தேர்வு செய்க
a. எல் + பாடு b. ஏற் + பாடு c. ஏ + ற்பாடு
d. ஏற் + பா + டு e. விடை தெரியவில்லை

30. தெரிநிலை பெயரெச்சம் அல்லாதது எது?
a. கூடி மகிழ்ந்தான் b. பேசிச்சிரித்தான் c. நோயின்றி வாழ்ந்தான்
d. தாவிச் சென்றது e. விடை தெரியவில்லை

31. வினையாலணையும் பெயர் அல்லாதது எது?
a. கொடுத்தோர் b. உரவோர் c. உணர்வோன்
d. கொணர்ந்தான் e. விடை தெரியவில்லை

32. ‘‘புகழ்பண்பு’’ என்பது?
a. பண்பு தொகை b. வினைத்தொகை c. உம்மைத்தொகை
d. உவமைத்தொகை e. விடை தெரியவில்லை

33. பண்புத்தொகை அல்லாதது எது?
a. மூதூர் b. உறுபகை c. இளங்கனி
d. தீம்பால் e. விடை தெரியவில்லை

34. ‘‘நேரினை’’ சொற்களில் பொருந்தாதது எது?
a. சீரும் சிறப்பும் b. பேரும் புகழும் c. அகம்புறம்
d. ஈடு இணை e. விடை தெரியவில்லை

35. ‘‘எதிரினை’’ சொற்களில் பொருந்தாதது எது?
a. குழிதாழ்ந்த b. விருப்பு வெருப்பு c. உயர்வு தாழ்வு
d. பள்ளம் மேடு e. விடை தெரியவில்லை

36. ‘‘செறிஇணை’’ சொற்களில் பொருந்தாதது எது?
a. பச்சைப்பசேல் b. செக்கச்செவேல் c. கண்ணங்கரேல்
d. குற்றம்குறை e. விடை தெரியவில்லை

37. பொருந்தாதது எது? (பால்பகா பெயர்கள்)
a. ஏழை b. தொழிலாளி c. உழத்தி
d. சிற்பி e. விடை தெரியவில்லை

38. சரியானது எது?
a. அதுகள் கூறின b. அது கூறின c. அதுகள் கூறியது
d. அது கூறியது e. விடை தெரியவில்லை

39. சரியற்றது எது?
I. பறவை பறக்காது II. பறவைகள் பறக்காது
III. பறவை பறக்க IV. பறவைகள் பறக்கா
a. II, III b. I, IV c. III, IV
d. I, II e. விடை தெரியவில்லை

40. ஜெயகாந்தன் படைப்புகளில் பொருந்தாதது எது?
a. கங்கை எங்கே போகிறாள்? b. சினிமாவுக்கு போன சித்தாளு
d. இன்னும் ஒரு பெண்ணின் கதை d. ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
e. விடை தெரியவில்லை

41. ஓர் எழுவாயோ பல எழுவாய்களோ இருந்து ஒரு பயனிலையைக் கொண்டு அமைவது ________
a. தனிச்சொற்றொடர் b. தொடர் சொற்றொடர் c. கலவைச் சொற்றொடர்
d. வினைமுற்றுத் தொடர் e. விடை தெரியவில்லை

42. பொருத்துக (சாகித்ய அகாதெமி விருதுகள்)

| | | | |
|---|---|---|---|
| A. 1970 | 1. வேருக்கு நீர் (நாவல்) | i. கு. அழகிரி சாமி |
| B. 197 | 2. அன்பளிப்பு (சிறுகதைகள்) | ii. ஜெயகாந்தன் |
| C. 1972 | 3. சில நேரங்களில் சில மனிதர்கள் (நாவல்) | iii. நா. பார்த்தசாரதி |
| D. 1973 | 4. சமுதாய வீதி (நாவல்) | iv. இராஜம்கிருஷ்ணன் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2, iv | 4, i | 3, ii | 1, ii |
| b. | 2, i | 3, ii | 4, iv | 1, iii |
| c. | 1, iii | 3, ii | 4, I | 2, iv |
| d. | 4, i | 2, iv | 3, ii | 1, iii |

e. விடை தெரியவில்லை

43. 'அறியேன்' என்பது பகுபத உறுப்பிலக்கணப்படி எவ்வாறு பிரியும்?
a. அறி + ய் + ஏன் b. அறி + ஏன் c. அறி + ய் + ஆ + ஏன்
d. அறி + ய் + ஏ + ன் e. விடை தெரியவில்லை

44. கூத்துப்பட்டறை ந. முத்துசாமி பற்றியக் கூற்றுகளில் சரியானது அல்லாதது எது / எவை?
1. தெருக்கூத்தைத் தமிழ் கலையின் முக்கிய அடையாளமாக்கியவர்
2. நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் என்றவர்
3. இந்திய அரசின் தாமரைச் செவ்வணி விருதையும் தமிழக அரசின் கலைமாமணி விருதையும் பெற்றார்
4. கலைஞாயிறு என்றழைக்கப்படுகிறார்

a. 1, 3 மட்டும் b. 3 மட்டும் c. எதுவுமில்லை
d. அனைத்தும் e. விடை தெரியவில்லை

45. இராஜம் கிருஷ்ணனின் 'வேருக்கு நீர்' புதினமானது __________
a. உப்பளத் தொழிலாளர்களின் உவர்ப்பு வாழ்க்கைப் பற்றியது
b. மீனவர் வாழ்வின் சிக்கல்களைப் பற்றியது
c. அமைப்புசாரா வேளாண் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுவது பற்றியது
d. பெண் குழந்தைக் கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து எழுதியது
e. விடை தெரியவில்லை

46. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாததைத் தேர்ந்தெடு
a. சமத்துவம் - அமைதி, மேன்மை ஆகியவற்றைச் சுட்டும் குணம்
b. இராசசம் - சோம்பல், தாழ்மை போன்றவற்றைக் குறிக்கும் சொல்
c. தாமசம் - போர், தீவிரமான செயல்களைக் குறிக்கும் சொல்
d. அனைத்தும் பொருத்தமாக உள்ளது
e. விடை தெரியவில்லை

47. "ஞாயிறு திங்கள், நெஞ்சம் போன்ற அஃறிணைப் பொருட்கள் சொல்லுந போலவும், கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும்" என்ற வரிகள் தொல்காப்பியத்தில் எந்த இயலில் இடம் பெற்றுள்ளது?
a. வினையியல் b. கிளவியாக்கம் c. வேற்றுமையியல்
d. செய்யுளியல் e. விடை தெரியவில்லை

48. "கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்"
கண்ட பேரண்டம் தண்டலை நாடும்
கனக மூன்றில் அனம் விளையாடும் - என்ற வரிகளில் பயின்று வரும் தொடை எது?

a. மோனைத்தொடை b. எதுகைத்தொகை c. முரண்தொடை
d. இயைபுத்தொடை e. விடை தெரியவில்லை

49. ராஜம்கிருஷ்ணன் எழுதிய பாரதியின் வரலாற்றுப் புதினம் எது?
a. பாப்பாபாட்டு பாடிய பாரதி b. கண்ணன்பாட்டு பாடிய பாரதி
c. பாஞ்சாலிசபதம் பாடிய பாரதி d. அனைத்தும்
d. விடை தெரியவில்லை

50. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க
கூற்று: இடைச்சொற்கள் தமிழில் மிகுதியாக இல்லை. ஆயினும், இடைச் சொற்களே மொழிப்பயன்பாட்டை முழுமையாக்குகின்றன.
காரணம்: ஏனெனில் இவை தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையது என தொல்காப்பியர் கூறுகிறார்.
a. கூற்று காரணம் இரண்டும் சரி, மேலும் சரியான விளக்கம்
b. கூற்று காரணம் இரண்டும் சரி, மேலும் சரியான விளக்கமல்ல
c. கூற்று சரி காரணம் தவறு
d. கூற்று காரணம் இரண்டும் தவறு
e. விடை தெரியவில்லை

51. பொருத்துக
A. செங்காந்தன் 1. பண்புத்தொகை
B. கொல்களிறு 2. வினைத்தொகை
C. தாய்சேய் 3. உம்மைத்தொகை
D. முறுக்கு மீசைவந்தார் 4. அன்மொழித்தொகை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 1 | 3 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

52. பொருந்தாத இணையைத் தேர்க
1. தலைக்கு ஒரு பழம் கொடு - பொருளாகு பெயர்
2. மல்லிகை சூடினாள் - சினையாகு பெயர்
3. திசம்பர் சூடினாள் - காலவாகு பெயர்
4. பொங்கல் உண்டான் - பண்பாகு பெயர்

a. 1, 2 மட்டும் b. 1, 2, 4 மட்டும் c. 3 மட்டும்
d. 1, 3 மட்டும் e. விடை தெரியவில்லை

53. கீழ்க்கண்ட கூற்றில் தவறானதைத் தேர்க
1. உயிர் எழுத்துகளில் குறிலுக்கு நெடிலும், நெடிலுக்கு குறிலும் இன எழுத்துக்கள் ஆகும்
2. குறில் இல்லாத “ஐ” என்னும் எழுத்துக்கு “இ” என்பது இன எழுத்தாகும்
3. “ஔ” என்னும் எழுத்துக்கு “உ” என்பது இன எழுத்தாகும்
4. ஆளபெடையில் மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும்

a. 1 தவறு b. 2 தவறு c. அனைத்தும் தவறு
d. தவறானது எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

54. கீழ்க்கண்டவற்றில் சரியானதை தேர்க



APOLLO STUDY CENTRE

1. உயிர் எழுத்துக்கள் "கஉ" கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன
2. வல்லின மெய் எழுத்துகள் "சூ" மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
3. மெல்லின மெய் எழுத்துகள் "சூ" மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன
4. இடையின மெய் எழுத்துகள் "சூ" கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

a. 1, 3 சரி　　b. 1, 3, 4 சரி　　c. அனைத்தும் சரி
d. சரியானது ஏதுமில்லை　　e. விடை தெரியவில்லை

55. கீழ்க்கண்ட கூற்றில் சரியானதை தேர்க
1. அடுக்குத்தொடரில் உள்ள சொற்களைத் தனித்தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றிற்கு பொருள் உண்டு
2. அடுக்குத்தொடரில் ஒரு சொல் இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வரும்
3. அடுக்குத் தொடரில் சொற்கள் தனித்தனியே நிற்கும்
4. அடுக்குத்தொடர் "விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம்" ஆகிய பொருட்கள் காரணமாக வரும்

a. 4 மட்டும்　　b. 2, 4 மட்டும்　　c. ஏதுமில்லை
d. 3, 4 மட்டும்　　e. விடை தெரியவில்லை

56. "ஆட்சிக்கும் அஞ்சாமல் யாவரேனும்
ஆள்கவெனத் துஞ்சாமல், தனது நாட்டின்
மீட்சிக்குப் பாடுபவன் கவிஞன் ஆவான்" – என்று பாடியவர் யார்?

a. பாரதிதாசன்　　b. கண்ணதாசன்　　c. முடியரசன்
d. பாரதியார்　　e. விடை தெரியவில்லை

57. செய் - என்னும் வேர்ச் சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடு:
a. செய்தீர்　　b. செய்வாய்　　c. செய்தவன்
d. செய்தான்　　e. விடை தெரியவில்லை

58. சொற்களை ஒழுங்குபடுத்திச் சரியான சொற்றொடர் எழுதுக:
a. "கல்லார்க்கும் கற்றார்க்கும் களிப்பருளும் களிப்பே"
b. "கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பருளம் களிப்பே"
c. "களிப்பே களிப்பருளும் கற்றார்க்கும் கல்லார்க்கும்"
d. "களிப்பருளும் களிப்பே கற்றார்க்கும் கல்லார்க்கும்"
e. விடை தெரியவில்லை

59. பொருந்தா இணையைக் கண்டறிக:
a. தினம் - நாள்
b. நெருதல் - நேற்று
c. சலவர் - நல்லவர்
d. மாரன் - மன்மதன்
e. விடை தெரியவில்லை

60. 'மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து ஈனமில் கிருமி செருவினில் பிழைத்தும்' என்ற உயிரியியல் தொழில்நுட்பத்தை அறிவுறுத்தும் நூல்
a. தேவாரம்　　b. திருவாசகம்　　c. திருக்கோவையார்
d. திருப்பள்ளியெழுச்சி　　e. விடை தெரியவில்லை

61. ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை" - இப்பாடலடியில் அமைந்துள்ளவாறு பின்வருவனவற்றுள் எது தவறானது?
a. சீர்மோனை அமைந்துள்ளது

b. சீர் முரண் அமைந்துள்ளது
c. சீர் இயைபு அமைந்துள்ளது
d. கீழ்க்கதுவாய்மோனை அமைந்துள்ளது
e. விடை தெரியவில்லை

62. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.
a. சீராட்டு தாலாட்டு நீராட்டு பாராட்டு
b. தாலாட்டு சீராட்டு பாராட்டு நீராட்டு
c. நீராட்டு பாராட்டு சீராட்டு தாலாட்டு
d. பாராட்டு நீராட்டு தாலாட்டு சீராட்டு
e. விடை தெரியவில்லை

63. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பி தேரினும் அ∴தே துணை – கீழ்க்காணும் சொற்களுள் எதிர்ச்சொல்லைக் கண்டறிக:
a. பரிந்து x வெறுத்து
b. பரிந்து ஓ விரும்பி
c. தெரிந்து x உணர்ந்து
d. தெரிந்து x ஆராய்ந்து
e. விடை தெரியவில்லை

64. மனிதர்களின் மாறுபட்ட மன விகாரத்தை எடுத்து உணர்த்தும் “ஈஸ்வரலீலை” என்னும் கதைநூலின் ஆசிரியர்
a. வாச. ராமாமிருதம்
b. சி.சு. செல்லப்பா
c. ந. பிச்சமூர்த்தி
d. தி. ஜானகிராமன்
e. விடை தெரியவில்லை

65. வாக்கியங்களைக் கவனி:
கூற்று (A): எ.கா “நான் புத்தகம் கொண்டு வருகிறேன்” என்று பவானி, காயத்ரியிடம் கூறினாள்
காரணம் (R): ஒருவர் கூறியதை அப்படியே கூறுவது மேற்கோள் குறியீடு இடம் பெறும், தன்மை, முன்னிலைப் பெயர்கள் இடம்பெறும் என்பது நேர்க்கூற்று ஆகும்.
a. இவற்றுள் A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A விற்கு சரியான விளக்கமல்ல
b. இவற்றுள் A தவறு ஆனால் R சரி
c. இவற்றுள் A சரி ஆனால் R தவறு
d. இவற்றுள் A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A விற்கு சரியான விளக்கம்
e. விடை தெரியவில்லை

66. சொற்களை ஒழுங்குப்படுத்திச் சொற்றொடராக்குதல்
a. தமிழில் பேசுதல் தமிழறிந்தாரிடம் தமிழர் தகுதி மிக பண்பாகும்
b. தமிழறிந்தாரிடம் தமிழர் தகுதி மிகு பண்பாகும் தமிழில் பேசுதல்
c. தகுதி மிகு பண்பாகும் தமிழில் பேசுதல் தமிழறிந்தாரிடம் தமிழர்
d. தமிழர் தமிழறிந்தாரிடம் தமிழில் பேசுதல் தகுதிமிகு பண்பாகும்
e. விடை தெரியவில்லை

67. வாக்கிய அமைப்பினைக் கண்டறிதல்.
பள்ளிக்கல்வி இயக்குநர் அறிவியல் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார் - எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.
a. தனி வாக்கியம்
b. கலவை வாக்கியம்
c. செயப்பாட்டு வினை வாக்கியம்
d. பிறவினை வாக்கியம்
e. விடை தெரியவில்லை

68. தவறான தொடரைக் கண்டுபிடி:
a. ஆயிரம் யானைகளை வென்றவனைப் பாடுவது – பரணி
b. மூவேந்தர்களைப் பற்றிய செய்திகள் - முத்தொள்ளாயிரம்
c. பதினெட்டு உறுப்புகளால் ஆனது – கலம்பகம்
d. ஒரே சொல்லைத் திரும்பத் திரும்பப் பாடுவது – அந்தாதி
e. விடை தெரியவில்லை

69. இயற்பெயரொடு புனைப்பெயரைப் பொருத்துக:
A. துரைராசு — 1. மயன்
B. வ.செ. குழந்தைசாமி — 2. நகுலன்
C. டி.கே. துரைசாமி — 3. முடியரசன்
D. நா. சுப்பிரமணியம் — 4. குலோத்துங்கள்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 1 | 3 |
| b. | 3 | 2 | 4 | 1 |
| c. | 1 | 4 | 2 | 3 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

70. "இது செய்வாயா"? என்பதற்கு நீயே செய் என்று மொழியும் விடை எது?
a. உற்றது உரைத்தல்
b. உறுவது கூறல்
c. ஏவல் விடை
d. வினா எதிர் வினாதல் விடை
e. விடை தெரியவில்லை

71. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருள் இணை தருக.

| கலை | | கழை |
|---|---|---|
| a. கலைத்தல் | - | மரம் |
| b. கவின்கலை | - | மூங்கில் |
| c. நீக்குதல் | - | கழைக்கூத்து |
| d. ஒப்பனை | - | தழைத்தல் |

e. விடை தெரியவில்லை

72. 'The light of Asia' என்ற ஆங்கில நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர்
a. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
b. நாமக்கல் கவிஞர்
c. உடுமலை நாராயண கவி
d. மருதகாசி
e. விடை தெரியவில்லை

73. பொருத்துக:
A. இடுகுறிப் பொதுப்பெயர் — 1. மரங்கொத்தி
B. இடுகுறிப் சிறப்புப் பெயர் — 2. பறவை
C. காரணப் பொதுப்பெயர் — 3. காடு
D. காரணச் சிறப்புப் பெயர் — 4. பனை

| | A | B | c | d |
|---|---|---|---|---|
| a. | 3 | 2 | 1 | 4 |
| b. | 3 | 1 | 4 | 1 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 2 | 1 | 3 | 4 |

 044-24339436, 42867555, 9840226187

e. விடை தெரியவில்லை

74. விடை தேர்க:

I. மொழியின் வளர்ச்சி என்பது வினவுவதிலும், விடையளிப்பதிலும் உள்ளது என நன்னூல் விளக்குகின்றது.

II. வினா 6 வகைப்படும், விடை 8 வகைப்படும்

III. எ, யா என்னும் வினாவெழுத்துகள் சொல்லின் முதலில் நின்று வினாப் பொருளைத் தரும்

IV. ஆ, ஓ என்னும் வினாவெழுத்து சொல்லின் ஈற்றில் நின்று வினாப் பொருளைத்தரும்.

a. I மற்றும் II தவறு III மற்றும் IV சரி

b. I சரி II தவறு III மற்றும் IV சரி

c. I மற்றும் II சரி III தவறு IV சரி

d. I, II, III, IV அனைத்தும் சரி

e. விடை தெரியவில்லை

75. பொருத்துக:

A. எ∴கு — 1. செய்யுளிசை யளபெடை

B. கெழீஇ — 2. இன்னிசையளபெடை

C. தொழா அர் — 3. சொல்லிசையளபெடை

D. கெடுப்பதூஉம் — 4. ஒற்றளபெடை

| | A | B | c | d |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 1 | 3 | 2 | 4 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 2 | 3 | 1 | 4 |

e. விடை தெரியவில்லை

76. "வினைத்தொகை" சரியானதை தேர்வு செய்க

1. சென்னிழல்
2. செந்நிழல்
3. சூழ் கடல்
4. உகுநீர்

a. 1, 2, 3, 4 – சரியானவை

b. 1, 3, 4 – சரி, 2 – தவறு

c. 1, 2 – தவறு, 3, 4 – சரி

d. 2, 3, 4 – சரி, 1 – தவறு

e. விடை தெரியவில்லை

77. நூல்களை நூலாசிரியர் பெயரோடு பொருத்துக:

| I நூல் | II நூலாசிரியர் |
|---|---|
| A. மானவிஜயம் | 1. கதிரேசஞ்செட்டியர் |
| B. மண்ணியல் சிறுதேர் | 2. பரிதிமாற்கலைஞர் |
| C. மனோன்மணியம் | 3. கோபால கிருஷ்ண பாரதி |
| D. நந்தனார் சரித்திரம் | 4. சுந்தரம் பிள்ளை |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 2 | 4 | 1 | 3 |
| b | 2 | 1 | 4 | 3 |
| c | 3 | 1 | 4 | 2 |
| d | 1 | 3 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

78. குற்றியலுகரம் பயின்று வரும் சொல்

a. கயிறு b. பயிரு c. வரவு

d. செலவு e. விடை தெரியவில்லை

79. சொல்லும் பொருளும் பொருத்துக: (ஓரெழுத்து ஒரு மொழி)

A. கா 1. ஒழுக்கம்

B. கூ 2. பூமி

C. கை 3. சோலை

D. கோ 4. அரசன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| A | 1 | 3 | 2 | 4 |
| B | 4 | 3 | 2 | 1 |
| C | 2 | 3 | 4 | 1 |
| D | 3 | 2 | 1 | 4 |

e. விடை தெரியவில்லை

80. கொடுக்கப்பட்டுள்ள செய்யுள் அடியில் அடிக்கோடிட்டச் சொற்களுக்குப் பொருத்தமான இலக்கணக் குறிப்பைக் கண்டறிக:

<u>சிற்றில் நற்றூண்</u> பற்றி நின் மகன்

a. பண்புத்தொகை, உருவகம்

b. பண்புத்தொகை, வினையெச்சம்

c. பண்புத்தொகை, வினைத்தொகை

d. பண்புத்தொகை, பண்புத்தொகை

e. விடை தெரியவில்லை

81. பொருத்துக:

A. SHELL AC 1. கிளிஞ்சல் உயிரி

B. SHELL, FISH 2. அரக்கு

C. SHELVE 3. மேல் ஓடு

D. SHELL 4. தள்ளிப்போடு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 4 | 3 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 2 | 4 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

82. கொடுக்கப்பட்டுள்ள செய்யுளில் அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான இலக்கணக் குறிப்பைக் கண்டறிதல்

‘<u>எத்திசையும்</u> புகழ்மணக்க இருந்த <u>பெருந் தமிழ</u>ணங்கே’

a. உம்மைத்தொகை, வினைத்தொகை

b. முற்றும்மை, பண்புத்தொகை

c. இழிவு சிறப்பும்மை, உயர்வு சிறப்பும்மை

d. வினைத்தெகை, பண்புத்தொகை

e. விடை தெரியவில்லை

83. “சேரிமொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலன் உணர்ந்தோரே” என்று கூறியவர் யார்?
a. நற்கவிராச நம்பி b. பவணந்தி முனிவர் c. ஐயனாரிதனார்
d. தொல்காப்பியர் e. விடை தெரியவில்லை

84. “கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே…..”
எனும் சொற்றொடர் இடம் பெறும் நூல்?
a. அகநானூறு b. புறப்பொருள் வெண்பாமாலை c. நாலடியார்
d. நற்றிணை e. விடை தெரியவில்லை

85. ‘உரைநடை எழுதுவது தனது தொழில்’ என்ற வகையில் உழைத்தவர் யார்?
a. மு. வரதராசனார் b. ரா.பி. சேதுப்பிள்ளை
c. திரு.வி. கலியாணசுந்தரனார் d. கண்ணதாசன்
e. விடை தெரியவில்லை

86. பொருத்துக:
A. வினைத் தொகை 1. நாலிரண்டு
B. உவமைத் தொகை 2. செய்தொழில்
C. உம்மைத்தொகை 3. பவள வாய் பேசினாள்
D. அன்மொழித் தொகை 4. மதிமுகம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 3 | 1 |
| b. | 4 | 2 | 3 | 1 |
| c. | 3 | 1 | 4 | 2 |
| d. | 2 | 4 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

87. வெற்பு, சிலம்பு, பொருப்பு – ஆகிய சொற்கள் குறிக்கும் பொருள்
a. நிலம் b. மலை c. காடு
d. நாடு e. விடை தெரியவில்லை

88. பொருத்துக:
A. இலக்கணமுடையது 1. புறநகர்
B. மங்கலம் 2. கால் கழுவி வந்தான்
C. இலக்கணப் போலி 3. இறைவனடி சேர்ந்தார்
D. இடக்கரக்கல் 4. நிலம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 1 | 4 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 3 | 4 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

89. அந்தந்த அடிகளில் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிக் கொள்வது – எவ்வகைப் பொருள்கோள்?
a. அடிமறிமாற்றுப் பொருள்கோள் b. அளைமறிபாப்பு பொருள்கோள்

c. கொண்டுகூட்டுப் பொருள்கோள் d. மொழிமாற்றுப் பொருள்கோள்
e. விடை தெரியவில்லை

90. நூலையும் நூலாசிரியரையும் பொருத்துக.

A. தி. ஜானகிராமன் 1. சாயாவனம்
B. க. நா. சுப்பிரமணியன் 2. செம்பருத்தி
C. சா. கந்தசாமி 3. கரைந்த நிழல்கள்
D. அசோகமித்திரன் 4. பெரியமனிதன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 1 | 3 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 3 | 1 | 2 | 4 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

91. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது
-இக்குறட்பாவில் 'நுணங்கி' – என்னும் பொருளுணர்த்தும் ஆங்கிலச் சொல்
a. SILENCER b. INTELLIGENT c. SIGNOR
d. Silver – Tongued e. விடை தெரியவில்லை

92. பொருந்தாததைச் சுட்டுக:
a. வாதம் b. ஏமம் c. பித்தம்
d. சீதம் e. விடை தெரியவில்லை

93. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி:
i. தெரிநிலை பெயரெச்சம் - காலத்தையும் செயலையும் தெளிவாக உணர்த்துவது
ii. குறிப்பு பெயரெச்சம் - காலத்தையும் செயலையும் மறைத்து பண்பை மட்டும் காட்டுவது
a. i சரி ii தவறு b. i தவறு ii சரி c. i, ii ம் சரி
d. i, ii ம் தவறு e. விடை தெரியவில்லை

94. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி:
கூற்று A : உயிரளபெடை வகைகளுள் இன்னிசையளபெடை மூன்று மாத்திரையாக ஒலிக்கும்.
விளக்கம் R : செய்யுளில் ஓசை குறையாத போதும் இனிய இசைக்காக அளபெடுப்பது இன்னிசையளபெடை
a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் A க்கு R சரியான விளக்கமாகும்
b. A மற்றும் R இரண்டும் தவறு
c. A சரி R தவறு மேலும் A க்கு R சரியான விளக்கமன்று
d. A தவறு R சரி R விளக்கத்திற்கு பொருத்தமான தொடராகயு அமையவில்லை
e. விடை தெரியவில்லை

95. பின்வரும் இலக்கணங்களுள் தவறானது எது?
a. இகழ்வார் - விணையாலனையும் பெயர்
b. செந்நீர் - வினைத் தொகை
c. இன்னாச்சொல் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
d. உண்ணாது – வினையெச்சம்

e. விடை தெரியவில்லை

96. திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும்
மங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்
-எனத் தமிழின் பழஞ் சிறப்பினைப் பெருமிதம் பொங்கப்பாடிய கவிஞர்

a. பாரதியார் b. கண்ணதாசன் c. சுரதா
d. பாரதிதாசன் e. விடை தெரியவில்லை

97. அகர வரிசைப்படி தேர்தெடுத்து எழுதுக
a. மெல்ல, மீன், மையல், மண், முடிவு
b. மண், மீன், முடி, மெல்ல, மையல்
c. முடி, மீன், மெல்ல, மையல், மண்
d. மண், முடி, மையல், மெல்ல, மீன்
e. விடை தெரியவில்லை

98. ‘கூவா முன்னம் இளையோன் குறுகிநீ’ கொடுக்கப்பட்டுள்ள செய்யுளில் அடிக்கோடிட்ட சொற்களுக்கு பொருத்தமான இலக்கணக் குறிப்பைக் கண்டறிக.
a. பெயரெச்சம், வினையெச்சம்
b. பண்புத்தொகை, பெயரெச்சம்
c. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், வினையெச்சம்
d. வினைமுற்று, வினையெச்சம்
e. விடை தெரியவில்லை

99. ‘இன்மையுள் இன்மை விருந்தொரால்’ - இதில் விருந்து என்பதன் இலக்கணக் குறிப்பு தருக.
a. பண்புப் பெயர் b. வினையாலணையும் பெயர்
c. பண்பாகு பெயர் d. வியங்கோள் வினைமுற்று
e. விடை தெரியவில்லை

100. அகரவரிசைப்படி சரியாக அமைந்த சொல்வரிசையைக் குறிப்பிடுக:
a. அமிர்தம், அமிழ்து, அமிழ்தம், அமிழ்தல்
b. ஈரம்,ஈரல்,ஈருயிர்,ஈகை
c. கண், கண்டம், கண்டு, கண்ணி
d. தகடு, தகழி, தகவு, தகர்
e. விடை தெரியவில்லை

101. ‘அப்பிசி மாசம் அடமள இம்பாங்க’ - இத்தொடரின் பிழைநீங்கிய வடிவம்
a. ஐப்பசி மாசம் அடமழைம்பாங்க
b. ஐப்பசி மாதம் அடமழை என்பாங்க
c. ஐப்பசி மாதம் அடைமழ என்பார்கள்
d. ஐப்பசி மாதம் அடைமழை என்பார்கள்
e. விடை தெரியவில்லை

102. “மரபுக் கவிதையில் வேர் பார்த்தவர்
புதுக் கவிதையில் மலர் பார்த்தவர்”
என்று பாராட்டபடுபவர்

a. முடியரசன் b. வாணிதாசன் c. சுரதா
d. அப்துல் ரகுமான் e. விடை தெரியவில்லை

103. தவறாகப் பிரிக்கப்பட்டுள்ள சொல்லைத் தேர்க:
a. வெண்மதி = வெண் + மதி
b. வெந்துவர்ந்து = வெந்து + உவர்ந்து
c. காடிதனை = காடு + இதனை
d. கருமுகில் = கருமை + முகில்
e. விடை தெரியவில்லை

104. ‘ஊ’ என்ற சொல்லின் பொருளை தேர்ந்தெடு:
a. இறைச்சி
b. உலகம்
c. உயிர்
d. உயர்வு
e. விடை தெரியவில்லை

105. ‘து’ என்னும் சொல்லின் பொருள் பின்வருவனவற்றுள் எது?
a. ஆறு
b. துப்பு
c. உண்
d. துன்பம்
e. விடை தெரியவில்லை

106. கீழ்க்காணும் வாக்கியங்களில் எவை சரியானவை?
I. எனது மகன் சரியான நெஞ்சழுத்தக்காரன்
II. அவளது தந்தை அவள் மீது உயிரையே வைத்திருக்கிறார்
III. நும் கூற்று சிறிதும் ஏற்கத்தக்கது அன்று
IV. அவை எல்லாம் மாதவியின் நூல்கள்
a. I மற்றும் III
b. II மற்றும் IV
c. III மற்றும் IV
d. II மற்றும் III
e. விடை தெரியவில்லை

107. பட்டியல் I இல் உள்ள தொடர்களைப் பட்டியல் II இல் உள்ள தொடர் வகைகளோடு பொருத்தி, உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. என்னே. மயிலின் அழகு! | 1. எதிர்மறைத் தொடர் |
| B. கண்ணன் பாடம் படித்திலன் | 2. உணர்ச்சித் தொடர் |
| C. மணிமொழி பரிசு பெற்றாள் | 3. உடன்பாட்டுத் தொடர் |
| D. உழைத்துப்பிழை | 4. உடன்பாட்டுத் தொடர் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 2 | 1 | 4 | 3 |
| d. | 3 | 4 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

108. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்கி, சரியான தொடரைக் குறிப்பிடுக:
a. படைமடம் பேகன் படான் கொடைமடம் படுதல் அல்லது
b. பேகன் கொடைமடம் படுதல் அல்லது படைமடம் படான்
c. பேகன் படைமடம் படுதல் அல்லது கொடைமடம் படான்
d. கொடைமடம் பேகன் படுதல் அல்லது படைமடம் படான்
e. விடை தெரியவில்லை

109. விடை தேர்க:
பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்
-இக் குறட்பாவில் பயின்றுவரும் அணி
a. சொற்பொருள் பின்வருநிலையணி
b. பொருள் பின்வருநிலையணி
c. உவமையணி
d. சொற் பின்வருநிலையணி

e. விடை தெரியவில்லை

110. பொருந்தா இணையைக் கண்டறிக:
a. வெண்தயிர் - பண்புத்தொகை
b. இரைதேர்தல் - வினைத்தொகை
c. நாழிகைவாரம் - உம்மைத்தொகை
d. கயிலாய வெர்பு - இருபெயரொட்டுப் பண்புத்தொகை
e. விடை தெரியவில்லை

111. பெறு - இச்சொல்லுக்கான வினைமுற்றைத் தேர்ந்தெடு:
a. பெற்றான் b. பெற்றவன் c. பெற்று
d. பெற்றவர் e. விடை தெரியவில்லை

112. பொருந்தாத சொல்லைக் கண்டறிக:
a. கப்பல் b. அம்பி c. ஆழி
d. திமில் e. விடை தெரியவில்லை

113. சொல்லுக்கு அழுத்தம் தரும் உயிரெழுத்து எது?
a. அ b. ஊ c. ஐ d. ஏ e. விடை தெரியவில்லை

114. வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இவற்றினைப் பயனிலையாகக் கொண்டு முடிவது?
a. நான்காம் வேற்றுமை b. இரண்டாம் வேற்றுமை
c. முதல் வேற்றுமை d. ஆறாம் வேற்றுமை
e. விடை தெரியவில்லை

115. கீழ்க்காணும் ‘வல்லினம் மிகும் இடம்’
குறித்த கூற்றில் பிழையான கூற்றைத் தேர்ந்தெடுக்க:
a. அந்த, இந்த, எந்த என்னும் சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்
b. ஓரெழுத்து ஒரு மொழியில் வரும் வல்லினம் மிகும்
c. உம்மைத் தொகையில் வல்லினம் மிகும்
d. சால, தவ என்னும் உரிச்சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்
e. விடை தெரியவில்லை

116. ‘சேர்’ என்னும் வேர்ச்சொல்லின் பெயரெச்சம்
a. சேர்ந்து b. சேர்க c. சேர்ந்த
d. சேர்ந்தது e. விடை தெரியவில்லை

117. பொருந்தாத விடையைக் கண்டறிக:
“சுந்தர ராமசாமி” எழுதிய நாவல்கள்
a. புளியமரத்தின் கதை b. பஞ்சும் பசியும்
c. ஜே.ஜே. சில குறிப்புகள் d. குழந்தைகள் ஆண்கள் பெண்கள்
e. விடை தெரியவில்லை

118. பொருளுக்கு ஏற்ற பொருத்தமான உவமையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
‘காத்திருந்து ஏமாந்து போவது’
a. மழைமுகம் காணாப் பயிர் போல b. இலவு காத்த கிளி போல
c. அனலிடைப்பட்ட புழு போல d. கிணற்றுத் தவளை போல
e. விடை தெரியவில்லை

119. இரண்டு அடி முதல் பன்னிரண்டு அடி வரை வரும் பா
a. வெண்பா b. ஆசிரியப்பா c. வஞ்சிப்பா
d. கலிப்பா e. விடை தெரியவில்லை

120. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.
‘கூம்பு என்பது ________ பெயர் ஆகும்.
a. அளவுப்பண்பு b. சுவைப்பண்பு c. வடிவப்பண்பு
d. நிறப்பண்பு e. விடை தெரியவில்லை

121. ‘அன்னபூரணி’ எனும் புதினத்தின் ஆசிரியர்
a. ஜெயகாந்தன் b. அகிலன் c. வைரமுத்து
d. க.சச்சினாந்தன் e. விடை தெரியவில்லை

122. “வருகையாகிய சின்னாள் வாழா ளாதல்”
- இந் நற்றிணைப் பாடலில் சின்னாள் என்பது
a. சில நாள் b. சிறு நாள் c. சிறிய ஆள்
d. சின்ன ஆள் e. விடை தெரியவில்லை

123. சீர் எதுகை அமைந்த தொடரைக் கண்டறிக.
a. வருக மற்றிவண் தருக ஈங்கென
b. கள்வனைக் கோறல் கடுங்கோலன்று
c. இந்துவின் நூதலாளோடு இளவலொடினிதேறா
d. வேதனைகள் வந்தாலும் விலகிப் போகும்
e. விடை தெரியவில்லை

124. சந்திப் பிழையற்ற தொடரைக் குறிக்க:
a. சமூகச் சீர்திருத்த கருத்துகளை விதைத்துப் பயிராக்கி மகிழ்ந்தவர் பண்டிதர்
b. சமூகச் சீர்திருத்த கருத்துகளை விதைத்து பயிராக்கி மகிழ்ந்தவர் பண்டிதர்
c. சமூகச் சீர்திருத்த கருத்துகளை விதைத்துப் பயிராக்கி மகிழ்ந்தவர் பண்டிதர்
d. சமூக சீர்திருத்த கருத்துகளை விதைத்து பயிராக்கி மகிழ்ந்தவர் பண்டிதர்
e. விடை தெரியவில்லை

125. கீழ்க்காணும் கூற்றுக்களில் இடம்பெறும் ஓரெழுத்து ஒருமொழிக்கு உரிய பொருளைக் கண்டறிக.
I. ‘பூ’ எனும் சொல் மலரையும், பெண்ணையும் குறிக்கும்
II. ‘பா’ எனும் சொல் செய்யுளையும், எழுத்தையும் குறிக்கும்
III. ‘வா’ என்பது ‘வருதல்’ எனும் வினையைக் குறிக்கும்
IV. ‘கோ’ என்பது கோவிந்தனின் பெயர்
a. IV, III மற்றும் II சரியானவை b. IV, II மற்றும் I சரியானவை
c. IV, I மற்றும் III சரியானவை d. I, II மற்றும் III சரியானவை
e. விடை தெரியவில்லை

126. ஓரெழுத்து ஒரு மொழி எத்தனை உள்ளன?
a. நாற்பத்திரண்டு b. ஐம்பத்திரண்டு c. முப்பத்திரண்டு
d. எழுபத்திரண்டு e. விடை தெரியவில்லை

127. ‘காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்

காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே’
என்று பாடியவர்

a. திருமூலர் b. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை c. பாரதியார்
d. பாரதிதாசன் e. விடை தெரியவில்லை

128. இரண்டு உதடுகள் குவிவதால் பிறக்கும் எழுத்துக்கள்
a. உ, ஒ b. இ,ஈ c. அ, ஆ
d. ப, ம e. விடை தெரியவில்லை

129. கொண்டல் கோபுரம் அண்டையில் <u>கூடும்</u>
கொடிகள் வானம் படிதர <u>மூடும்</u>
- இப்பாடலில் அடிக்கோடிட்டவையில் எவ்வகைத் தொடை நயம் இடம்பெற்றுள்ளது?
a. எதுகை b. இயைபு c. மோனை
d. தொடை e. விடை தெரியவில்லை

130. ‘செழுங்கனித்தீஞ்சுவை’ என்ற சொற்றொடர் சரியாகப் பிரிக்கப்பட்டிருப்பது எது?
a. செழுமை + கனி + தீஞ்சுவை b. செழும் + கனி + தீஞ்சுவை
c. செழும் + கனி + தீம் + சுவை d. செழுமை + கனி + தீம் + சுவை
e. விடை தெரியவில்லை

131. மரபுப் பிழையற்ற தொடரைக் காண்க:
a. தென்னை ஓலையும் வேப்ப ஓலையும் கொண்டு வந்தான்
b. தென்னை இலையும் வேப்பந்தழையும் கொண்டு வந்தான்
c. தென்னங்கீற்றும் வேப்ப ஓலையும் கொண்டு வந்தான்
d. தென்னங்கீற்றும் வேப்பந்தழையும் கொண்டு வந்தான்
e. விடை தெரியவில்லை

132. ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை’’ - இப்பாடலடியில் அமைந்துள்ளவாறு பின்வருவனவற்றுள் எது தவறானது?
a. சீர்மோனை அமைந்துள்ளது
b. சீர் முரண் அமைந்துள்ளது
c. சீர் இயைபு அமைந்துள்ளது
d. கீழ்க்கதுவாய்மோனை அமைந்துள்ளது
e. விடை தெரியவில்லை

133. ‘வழுவற்ற வாக்கியம் எது?
a. மந்தையாக மேய்ந்து கொண்டிருந்த மாட்டைப் புலி துரத்தின
b. மந்தையாக மேய்ந்து கொண்டிருந்த மாடுகளைப் புலித் துரத்தின
c. மந்தையாக மேய்ந்து கொண்டிருந்த மாடுகளைப் புலி துரத்தியது
d. மந்தையாக மேய்ந்து கொண்டிருந்த மாட்டைப் புலி துரத்தியது
e. விடை தெரியவில்லை

134. வெண்பாவின் இலக்கணத்தை முதலிலும் ஆசிரியப்பாவின் இலக்கணத்தை ஈற்றிலும் பெற்று வருவது
a. இணைகுறள் ஆசிரியப்பா b. கலிப்பா
c. மருட்பா d. குறள்வெண் செந்துறை
e. விடை தெரியவில்லை

135. கீழ்வருவனவற்றுள் வினா எழுப்பப் பயன்படாத எழுத்து எது?
a. யா b. இ c. ஓ d. ஆ e. விடை தெரியவில்லை

136. ‘ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலில் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை’ எனக் கூறியவர்
a. பரணர் b. கூடலூர் கிழார c. பெருஞ்சித்திரனார்
d. ஔவையார் e. விடை தெரியவில்லை

137. கீழ்க்கண்டவற்றுள் தவறான உவமை எது?
a. முல்லைக்குக் காடுபோல b. சொல்லுக்குக் கீரன் போல
c. கல்விக்கு கம்பன் போல d. கவிதைக்குக் கம்பன் போல
e. விடை தெரியவில்லை

138. ‘திரு.வி.க. அவர்களுக்கு வாய்த்த மொழி நடை, மலை எனத் தமிழ் உலகில் ஓங்கி உயர்ந்துள்ளது’ எனப் பாராட்டியவர்:
a. அறிஞர் அண்ணா b. கல்கி
c. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் d. டாக்டர் மு.வ
e. விடை தெரியவில்லை

139. சிலை - இச்சொல்லின் பொருள்
a. கல் b. உருவம் c. வில்
d. ஓவியம் e. விடை தெரியவில்லை

140. சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்! கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர் - என்று உரைத்தவர் யார்?
a. திருஞான சம்பந்தர் b. சுந்தரர் c. சேக்கிழார்
d. திருநாவுக்கரசர் e. விடை தெரியவில்லை

141. இரண்டு எழுத்துகளை மட்டுமே பெற்றுவரும் குற்றியலுகரம் எது?
a. மென்றொடர் b. இடைத்தொடர் c. உயிர்தொடர்
d. நெடில் தொடர் e. விடை தெரியவில்லை

142. பூதரத்தில் கேசரியும், கேழலும், மேதியும் திரிந்தன. வாக்கியத்தை நன்கு படித்து பொருள் அறிக.
a. மலையில் புலியும், மானும், பன்றியும் திரிந்தன.
b. பாலை நிலத்தில் யானையும், பன்றியும், எருமையும் திரிந்தன.
c. மலையில் சிங்கமும், பன்றியும், எருமையும் திரிந்தன.
d. காட்டில் கரடியும், மானும், பசுவும் திரிந்தன.
e. விடை தெரியவில்லை

143. முல்லைக்கோர் காடுபோலும்
முத்துக்கோர் கடலேபோலும் - என்று மறைமலையடிகளாரைப் பாராட்டியவர்
a. வாணிதாசன் b. சுரதா c. மீரா
d. தமிழ் ஒளி e. விடை தெரியவில்லை

144. நேர்க்கூற்றை அயற்கூற்றாக மாற்றும் விதிகளில் தவறான ஒன்றைக் கண்டறி.
a. நேர்க்கூற்றில் இடம்பெற்றுள்ள மேற்கோள், காற்புள்ளி முதலியவற்றை எடுத்துவிட வேண்டும்.
b. தன்மையிடத்தைப் படர்க்கையாக மாற்றவேண்டும்

c. முன்னிலையிடத்தைத் தன்மையாகவோ படர்க்கையாகவோ மாற்ற வேண்டும்
d. கட்டளைச் சொல்லோடு 'என்று', 'என' எனும் சொல்லைச் சேர்க்க வேண்டும்
e. விடை தெரியவில்லை

145. சிறிய கடிதம் இதில் "சிறிய" என்பது
a. குறிப்பு பெயரெச்சம் b. குறிப்பு வினையெச்சம் c. தெரிநிலை வினையெச்சம்
d. தெரிநிலை பெயரெச்சம் e. விடை தெரியவில்லை

146. 'Might is Right' இதற்கு இணையான பழமொழி என்ன?
a. கோபம் குலத்தைக் கெடுக்கும் b. வல்லான் வகுத்ததே வாய்க்கால்
c. ஒற்றுமையே வலிமை d. தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்
e. விடை தெரியவில்லை

147. பொருத்துக
A. வாழையிலை 1. மெய்யீறு
B. தமிழ்நிலம் 2. உயிரீறு
C. மணிமாலை 3. மெய்முதல்
D. பொன்வண்டு 4. உயிர்முதல்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

148. "இரவும் பகலும்" – என்ற சொல்லில் பயின்றுவருவது யாது?
a. உம்மைத்தொகை b. எண்ணும்மை c. உருவகம்
d. உவமைத்தொகை e. விடை தெரியவில்லை

149. 'கலைஇய' இலக்கணக் குறிப்பு தருக
a. ஒற்றளபெடை b. இன்னிசை அளபெடை c. சொல்லிசை அளபெடை
d. செய்யுளிசை அளபெடை e. விடை தெரியவில்லை

150. அகர வரிசைப்படுத்துக
a. இமிழ்தல், இசைவு, பதுவனம், சபலை, துகலம்
b. இசைவு, இமிழ்தல், சபலை, துகலம், துவனம்
c. இசைவு, இமிழ்தல், துவனம், துகலம், சபலை
d. இசைவு, இமிழ்தல், சபலை, துவனம், துகலம்
e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE



அறிவுக்கு ஏற்றது, மக்களுக்கு நன்மை பயப்பது, மக்களின் அறிவை வளர்ச்சியடையச் செய்வது எதுவோ அதைப் பற்றியே பேசு.

-தந்தை பெரியார்